உ

சிவமயம்.

நதிவிலாசம்.

இது

சேற்றூர்ச் சமஸ்தானபதியாகிய மகாராஜபூஜித

மகாகனம் பொருந்திய

ஸ்ரீமத் வடமலைத்திருவநாத

சேவகப் பாண்டிய மகாராஜா

அவர்கள் மீது

ஷை சமஸ்தான வித்துவான்

கணபதிக் கவிராயரவர்களால்

இயற்றப்பெற்று

ஷை சமஸ்தானம் மஹாவித்துவான்

இராமசாமிக் கவிராயரவர்களால்

பார்வையிடப்பெற்று

மதுரை

விவேகபாநுப் பிரஸில்

பதிப்பிடப்பெற்றது.

1910.

உ

சிவமயம்.

நதிவிலாசம்.

இது

சேற்றூர்ச் சமஸ்தானபதியாகிய மகராஜபூஜித

மகாகனம் பொருந்திய

ஸ்ரீமத் வடமலைத்திருவநாத

சேவகப் பாண்டிய மகாராஜா

அவர்கள் மீது

ஷை சமஸ்தான வித்துவான்

கணபதிக் கவிராயரவர்களால்

இயற்றப்பெற்று

ஷை சமஸ்தானம் மஹாவித்துவான்

இராமசாமிக் கவிராயரவர்களால்

பார்வையிடப்பெற்று

மதுரை

விவேகபாநுப் பிரஸில்

பதிப்பிடப்பெற்றது.

1910.

குமரன்றுணை

முகவுரை.

அமிழ்தினுமினிய தமிழ்மொழிக்கண் யாப்பிலக்கண விதிவழுவாது செய்யுள் வடிவிலமைக்கப்படும் பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகைப்படுமென்ப. அவற்றுள் அகப் பொருட்டுறைகளை யமைத்துப் பாடப்பெறுவது கோவை யென்னும் பிரபந்தமாம். இக்கோவை நூலுக்குள் அமைந் துள்ளனவாகிய பற்பலதுறைகளினுள்ளே தலைவனிடத்து வேட்கைமிகையாற் றலைவி கலக்கமெய்தித் தன்னெதிர்ப் பட்டதொரு பொருளைநோக்கித் தன் நிலைமையைக் கூறுவ தாக அமைத்துப்பாடுவதே விலாசமெனப்படும்.

எட்டயபுரம் சம்ஸ்தான வித்துவானாகியிருந்த கடிகை முத்துப்புலவர்தாம் முதல் முதற் சமுத்திரவிலாசமென்னும் சிறந்த நூலையியற்றினர். பின்னர் மாம்பழக்கவிச்சிங்க நாவ லர் சந்திரவிலாசமென்னும் நூலையியற்றினர். மற்றுஞ் சில விலாசப் பிரபந்தங்களுண்டென்பாராயினும், மேற்குறித்த இரண்டு விலாசங்கள்மட்டுமே வெளிப்பட்டுள்ளன. சமுத் திரத்தை நோக்கிக் கூறியது "சமுத்திரவிலாசம்" எனவும் சந்திரனை நோக்கிக்கூறியது சந்திரவிலாசமெனவும் பெயர் பெற்றன.

இந்நதிவிலாச மென்பது சேற்றூர்ச் சமஸ்தானாதிபதியும், பெருங்கொடைப்பிரபுவும், பரம்பரையாகப் பற்பல தமிழ்வித்துவான்களைவைத்து அருமைபாராட்டி ஆதரித்து வரும் சுதந்தர சீமானும், ஆகிய மகாராஜ பூஜித ஸ்ரீசேவகப் பாண்டிய மகாராஜா அவர்கள் மீது ௸ சமஸ்தான வித்துவானாகிய நண்பர் கணபதிக்கவிராயரவர்களால் பாடப்பெற்றது. 32 கவிகளையுடையது. (காப்புச்செய்யுள் 1) கவிகளெல்லாம் சொற்சுவையும் பொருட்சுவையும் சந்த இன்பமுங்கொண்டுள்ளன. சிலேடைகளும் மடக்குகளும் கவிராயர் திறமையை விளக்கத்தக்க வண்ணம் அமைந்துள்ளன. நதியை நோக்கிக் கூறப்பெற்றமையால் நதிவிலாசமெனப்பெயர் பெற்றதாயிற்று.

தமிழ்வித்துவான்களைக் கண்டால் மிகவும் ஏளனமாக நினைத்தும், தமிழ்க் கவிகளைக்கேட்பதை வீண்காலப்போக்காகக் கருதியும், தம்மையே இந்திரனாக மதித்தும், கல்விஞானமின்றிப் புவிக்குப்பொறையா யிருக்கும் ஏனைய ஜமீந்தார்கள் இச்சேற்றூர் மன்னர் பெருமானைப்போலத் தமிழபிமானங்கொண்டு தமிழ்ப் பிரபந்தங்களையேற்றுத் தமிழ் வித்துவான்களை ஆதரித்து வருவார்களாயின் அவர்கள்புகழடைவார்கள்! நம் தமிழும் வளர்ச்சியுறும். இச்சேறை மன்னரவர்கள் அதிபால்யதிசையில் இருப்பினும் தம்அருமைப்பிதா மஹாராஜா அவர்கள் சிறந்த தமிழ் வித்துவானாக

இருந்தமையால் "மகனறிவு தந்தையறிவு" என்ற ஆன்றோர் திருவாக்கின்படி தாமும் அருங்கலை விநோதராக இருந்து தமிழையும் சைவத்தையும் ஆதரித்துவருதல் இத்தமிழ் நாட்டுக்கே ஒரு பெருஞ்சிறப்பாகுமென்பதிலையமில்லை.

கற்றோரேயன்றி மற்றோரும் அறிந்து மகிழ்தற்பொருட்டே இந்நூலின்பின் சிலேலடைகளை விளக்கி குறிப்புரையொன்று எழுதிச் சேர்த்திருப்பது பெரிதும் பயனுடைத்தேயாம். யான் இச்சேற்றூர்ச் சம்ஸ்தானப் பிரதம வித்துவகுடும்பத்திற் பிறந்தவனாதலின் இந்நூலைக்கண்டு பெருமகிழ்ச்சி யெய்தி யிம் முகவுரையை யெழுத முன் வந்தேன்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான்கள் பலரும் இந்நூலைக் கேட்டுப் பெருமகிழ் வெய்தினமை அன்னவர்களியற்றிய சாற்றுக் கவிகளானேயினிது விளங்கும்.

தமிழ் வித்துவகுல பரிபாலக பூபதியாகிய ஸ்ரீமாந் சேவகப்பாண்டிய மஹாராஜா அவர்கள் பல்லாண்டு பல்லாண்டாகப் பெருமகிழ்ச்சியுடன் வாழ்ந்து இன்னும் பற்பல தமிழ்ப் பிரபந்தங்களை யேற்றுப் பெரும் புகழ் அடையும் வண்ணம் பரமகருணாநிதியாகிய ஸ்ரீஅம்மையப்பர் திருவடித் தாமரை மலர்களைச் சிந்திக்கின்றேன். இங்ஙனம்.

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

மதுரை.
20—11—10

சேற்றூர்ச் சம்ஸ்தான வித்துவான் &
மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர்.

உ

சிவமயம்.

சாற்றுக்கவிகள்.

சேற்றூர்ச் சம்ஸ்தானம் பேர்ஷனல் அஸிஸ்டெண்டு

P. C. கணபதி ஐயர் **B. A., L. T.,** அவர்கள்

இயற்றியது.

திருவளருந் தென்சேறைப் பதிக்கணப திக்கவிஞர்
திலகனென்னும், பருவதத்தி னகரைநதி விலாசமெனு நதி
தோன்றிப் பயில்பா வாணப், பெருந்தடங்கள் செழித்திடச்
செய் தருளுயர்சே வகப்பாண்டிய பிரபுவென்னுங், கருங்
கடலிற் பாவியெங்கோன் கருணையெனப் பிரபலிக்கக் கண்
ணுற் றோமே.

சேற்றூர்ச் சம்ஸ்தானம் மன்னவர்களின் குலகுருவாகிய

ஸ்ரீமத் ஞானாநந்தசிவப்பிரகாசசிதம்பர தேசிகரவர்கள் இயற்றியருளியது.

புவிராசர் தமைப்பாடும் பிறர்கவிகள் செவிக்குமட்டும்
புகுந்தி னிக்குங், கவிராசக் கணபதிமேலன் சேவகப்பாண்
டியத்துரையாங் கனவான் றன்பேர், லவிர்பாகப் போனுரை

த்த நகரைநதி விலாசநன்னூ லதற்கே யன்றிச், சுவையாகு மனத்தினுக்கு நாவினுக்கும் விழியினுக்குஞ் சொல்லத் தானே.

சேற்றூர்ச் சம்ஸ்தானம் மஹாவித்துவான்

இராமசாமிக்கவிராயரவர்களியற்றியவை.

திருவுலவு மெட்டபுரங் கடிகைமுத்துப் புலவர்சமுத் திரவி லாசப், பரவையிடங் கருப்பொருள்க ளெத்தனையோ வுளவாற்கற் பனைவி சேடம், வரவுமிடங் கொடுத்ததிவ்வா றப்படிக்கின் றெனத்தெரிந்து மதிநுட் பத்தா, லுரைசெய் நதி விலாசமதைக் கணபதிநா வலற்கிணையா யுரைப்பார் யாரே. (க)

இருமா வென்னத் திருமாலே யியம்பு நாக மலைக்குமர னிருதாட் கமலந் தனைவாழ்த்தி யிரவும் பகலு மஞ்சலிக்கு; மருவார் தளவப் புயன்சேறை வள்ள லெனுஞ்சே வகப்பா ண்டிய மன்னர் பெருமான் றனதுநகர் வளத்தைக் காட்ட வந்துதித்த; தருவார் சோலை திகழ்தரும சைலத் திருந்து வளம்பொருந்து, சந்த நதிவி லாசமதைத் தமிழ்தேர் கணப திக்கவிஞன்; பெருவா ரிதிசூ பூலகதனிற் பெட்பா வுரைக் கத் தமிழ்ச்சேடன், பிண்ணக் காட்டுஞ் சக்கிரிப்பேர் பெற் ற லெவர்தாம் பேசுவரே. (உ)

மானகரா நதிபதியா மன்மதன்றந் தாவளத்தை வருத்துங் கூற்றை, மானகரா மீதினிற்சக் கரந்தொடுத்தோ னெந் நாளும் வளஞ்சூழ் சேறை, மானகரா திபதியெங்கள் சேவகப்பாண் டியசுமுகன் வளர்த மிழ்ப்பூ, மானகரா நதியின் விலா சந்தனைநங் கணபதிரா வலன்சொன் ஞனே. (௩)

மதுரைத்தமிழ்சங்கம் செந்தமிழ்க்கலாசாலைப் போதகாசிரியர்

சுந்தரேசுவரையரவர்களியற்றியது.

பூவகப் பாண்டியனே போலத் தமிழ் வளர்க்குஞ்
சேவகப் பாண்டியரா சேந்திரன்மே—லாவலுற்று
நன்னதிவி லாச நவின்றான் கணபதிப் பேர்
பன்னதிவி லாசமெய்ப்பண் பன்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் செந்தமிழ்ப் பத்திராதிபர்

மு. ராகவையங்காரவர்களியற்றியது.

வல்லாருந் தனமடவார் மடலெழுதும் வடிவழக மதனே யென்னப், பல்லாரும் புகழ்சேறைச் சேவகப்பாண் டியராச பண்பன் மேற்செஞ், சொல்லாருங் கணபதிப்பேர்ப் புலவனதி விலாசமொன்று சொற்றான் யாங்க, ளெல்லாரு நல்விருந்து கிடைத்ததெனப் பெருமகிழ்ச்சி யெய்துமாறே.

சேற்றூர்ச் சம்ஸ்தான வித்துவானும்
மதுரைத் தமிழ்ச்சங்க நூற்பரிசோதகரும் ஆகிய
மு. ரா. அருணாசலக்கவிராயரியற்றியது.

பந்தைநிகர் முலைமடவார் மடல்வரையு முருவமதன்
பாரி லென்றும், விந்தையமர் புயன்சேறைச் சேவகப்பாண்
டியமகிபன் மேலன் பாயெந், தந்தையிடங் கல்விகற்ற கண
பதிப்பேர்ப் பாவலவன் றமிழ்கற் றோர்தஞ், சிந்தைகளி கூர்
நதிவி லாசமொன்று செய்ததிக சிறப்புற் றானே.

சேற்றூர்ச் சம்ஸ்தான வித்துவானும்
மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபரும் ஆகிய
மு. ரா. கந்தசாமிக்கவிராயரியற்றியது.

தக்கதமிழ்ச் சுந்தரதா சேந்திரமன் னவன்புரிந்த தவ
த்தால் வந்த, மிக்கபுகழ்த் தென்சேறைச் சேவகப்பாண்
டியராசன் மேவுங் கீர்த்தி, திக்கனைத்து மிகப்பரவ மாநதிவி
லாசமொன்று சிறப்பாச் சொற்றான், பக்கமிருந் தவனருளைப்
படைத்தகண பதிப்பெயர்கொள் பாவல் லோனே.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஹிந்து ஐஸ்கூல் தமிழ் முன்ஷி
ரெ. அப்புவையங்காரவர்களியற்றியது.

மதிவிலா சஞ்செய்கண பதிக்கவிஞன் சேற்றூர்வாழ்
மகிப னான, துதிவிலா சங்கொளுஞ்சே வகப்பாண்டிய மக

ராசதுரையின் மீது, நதிவிலா சந்தமிழ்நன் னூலரேல் லாமதிக்க நவின்றேயச்சுப், பதிவிலா சந்திரார்க்க முறை நிறீஇப் படிபுகழும் படிசெய் தானே.

ஸ்ரீவில்லிபுத்தூர்த் தாலூகா மங்கலம் ஆந்திர திராவிட கீர்வாண வித்துவான்.

இராயலுவையங்கார் குமாரர்
ஸ்ரீ நிவாசையங்காரவர்களியற்றியது.

மாகனகம் பன்னுதமிழ் வாணருக்கி வான்சேறை மகிழ்ந்து காக்கும், யோகனகம் பன்மகவான் சேவகப்பாண் டியதுரைமே லுள்ளன் பூறப், பாகனகம் பன்மொழியா மெனநதிவி லாசமதைப் பகர்ந்தான் கேகி, வாகனகம் பன் னூளும் வாழுமெழிற் கணபதிப்பா வலர்சிங் கேறே.

சேற்றூர்ச் சம்ஸ்தானம் ஸ்தானபதி

புழனியாண்டி கரையாளரவர்கள்.

இயற்றியது.

தந்தியுரி போர்த்தமுக்கண் மலைக்கொழுந்தா மீசருக் குந் தவம்பெற் றுட்குஞ், சிந்தனையே செலுத்திவருஞ் சேவ கப்பாண் டியதுரைமேற் செகங்கொண் டாடக், கந்தனையே

வந்தனைசெய் கணபதிப்பா வாணனுளங் கனிவாய்ச் சொல் லுஞ், சந்தநதி விலாசநிகர் நாவலரிலெவர்புகலுந் தரமுற் ருரே.

ஷை சம்ஸ்தான வித்துவான்.

இராமகிருஷ்ணாசாரியவர்களியற்றியது.

தருமகிரி பிடத்துறைவான் றரவருத லாற்புவியோர் தமக்கெந் நாளு, மிருநிதியந் திரைக்கரத்தி னினிதுதவு நகைரநதி யிதனைக் கொண்டே, திருவனெனுஞ் சேவகப் பாண் டியதுரைமேற் சொல்வளமுஞ் சிலேடைச் செய்யுட், பொருள்வளமும் பெருகநதி விலாசமதைக் கணபதிவேள் புகன்றான் மன்னே.

பேரையூர் சம்ஸ்தானவித்துவான் அஷ்டாவதானம்

மீனாக்ஷிசுந்தரக் கவிராயரவர்களியற்றியவை.

சொல்லொழுக்கம் பொருளொழுக்கந் தொடர்நதி விலா சமொன்று தொகுத்தா னென்று, நல்லொழுக்க மிகுஞ் சேறை நாயகன்சே வகப்பாண்ட்ய நரபா லன்மேற், றொல் லொழுக்க நூலுணர்ந்தோர் சுவையமுத மிதையெனத் துய்ப்பா னெண்ணி, வில்லொழுக்கம் புருவமட வியர்மத னன் கணபதிப்பா வேந்தர் வேந்தே.

மாலாதி நாளரிய நெடுங்கடல் விலாசமுற மதித்துக் தன்று, லேலாதங் கிருவகையாய்ச் சேவகப்பாண் டியற் குமே லெவர்க்குந் தந்தான், மேலாய நதிவிலா சமுறமதித் தமுதொன்றே வியந்த ளித்தா, னூலாய்ந்த கணபதிப்பா வலனிவரில் யார்க்குயர்வு நுவல லாமே.

ஷை சமஸ்தானவித்துவான் சின்னயாபுரம்
அப்பாவு கரையாளரவர்களியற்றியது,

வலாசந் தனக்குட மாவெனுங் கொங்கையர் மையலுற
வுலாசந் தனம்பெறு சேவகப் பாண்டிய வுத்தமன்மேற்
பலாசந் தனப்பொழிற் சேறைக் கணபதி பன்னுநதி
விலாசந் தனக்கிணை யாரே யறிந்து விளம்புவரே.

சிவகிரிச்சம்ஸ்தானத்தைச் சேர்ந்த எட்டிசேரி
திருமலை வேலுக்கவிராயரவர்களியற்றியது.

மன்னகரை கடந்துவரி தரைவரினு முறைதவறு வள்ளால் வேணிப், பன்னகரை யானனராம் பரமர்பத நேயவெனப் பலரும் போற்றும், பொன்னகரை நிகர்சேறைச் சேவகப்பாண் டியதுரைமேற் புலவோர் மெச்ச, நன்னகரை நதிவிலா சம்பகர்ந்தான் கணபதிப்பேர் நாவல் லோனே.

சந்தனநல்லூர் வித்துவான் பொன்னையாபிள்ளை யென்ற
எஸ்.கே. அருணாசலப்பிள்ளையவர்களியற்றியவை

பார்மணக்குந் தென்சேறைச் சேவகப்பாண் டியமகுட பதிமேற் செஞ்சொ, லேர்மணக்கு நகரைநதி விலாசமதைக் கணபதிவே ளிசைத்தான் மெச்சிச், சீர்மணக்கு மஃதினை நாங் கண்டுகுள விலாசரசத் திதிப்பா மென்றேந், தார்மணக்கு மணியணியுந் தமிழ்ப்புலவீ ரெவைஞாயஞ் சாற்றுவீரே.

கந்தநதி விலாசமதைத் தமிழ்ச்சேட னைமட்டுங் கருதிப் பார்த்தே, யிந்நிலந் தன்னிலென்றாற் பதம்பிரித்துத் தெரிவிக்க வேலா தென்றுஞ், சந்தமுறு வான்புலவோர் பதங்கள்படா மற்சென்றுஞ் சரிப்புறுரே, லெந்தமதிப் புலவர்கடா மிதற்கருத்த மனக்கருத்தா யியம்பு வாரே.

ஷை சம்ஸ்தானம் ஆதிமூலமாசாரி அவர்கள் குமாரர்
சங்கரலிங்கமாசாரி இயற்றியது.

தென்னவன்றென் சேறைநகர்ச் சேவகப்பாண் டியராசதீரன் மீது, கன்னன்மொழி யார்க்குமதன் கணபதிநா வலவனெனுங் கவிஞரேறு, சொன்னநதி விலாசமதைச் சேடனகத் தியன்புகழ்ந்து சொல்லு வாரே, யின்னிலத்திற் றமிழ்ப்புலவோ ரிவன்புகழ்சொல் வதுபெரிதோ வியம்புங் காலே.

சாற்றுக்கவிகள் முற்றிற்று.

உ

சிவமயம்.

நதிவிலாசம்.

காப்பு.

வெயிலுகந்த விநாயகர் வணக்கம்.

ஆகுவாகனம்
சிங்கவாகனம்

இரண்டிற்குஞ் சிலேடை.

கடமேலேறு வரையினெதிர் கயமேலேறு நகரைநதிக் கயிவி லாச, மடமேலேறு மலர்த்தடஞ்சூழ் சேறைமன்னே வகப்பா ண்டிய மன்மேற் கூற, மிடமேலேறு கயமுகத்தா னுறகதி தன் வயத்தடங்க விடுவை யாளி, யடமேலேறு கந்துளவா கனவெயிலு கந்ததந்தி யடிகாப் பாமே.

தி லி லா ச ம்.

நூல்.

பாட்டுடைத்தலைவன் பவனிக்கும் நகரைநதிக்குஞ் சிலேடை:

பொன்னு மணியும் புனைந்துவளம்
பொருந்தப் புவனந் தழைத்தோங்கப்
புலவ ரையுமே புரந்துபலம்
புயமே தாங்கித் தமிழ்வளர்த்துப்
பன்னுஞ் சேறை வரவமைத்துப்
பரவுந் தேவர் புடைசூழப்
பணைசேர்ந் தொலிப்பச் சுழிசிறந்து
பாயுங் கனவட் டமும்படைத்து
மன்னுந் தந்தா வளத்துலவி
வளரும் புகழ்ச்சே வகப்பாண்டிய
மன்னன் பவனி போலெதிரே
வந்தாய் நகரை நன்னதியே
முன்னு மதிக வரம்பையுற்றாய்
முன்னு மதிக வரம்பையுற்றேன்
மோக முறுமென் வாய்மொழிய
மோக முறநீ கேட்பாயே, (க)

தலைவிக்கும் நகரை நதிக்குஞ் சிலேடை.

மயக்கந் தரித்து வளையெறிந்து
மலைவாய் வருந்தக் கவலையுற்று
வாகார் முல்லைக் கிசைவாகி
மருவும் படிக வனம்படைத்தாய்

மயக்கந் தரித்து வளையெறிந்து
மலைவாய் வருந்தக் கவலையுற்று
வாகார் முல்லைக் கிசைவாகி
மருவும் படிக வனம்படைத்தேன்

செயக்கந் தருவந் தனைநடத்துந்
திடமே வகப்பாண் டியன்பவனிச்
சேர்வை யடைந்த வெனைப்போலே
சேர்வை யிதனை லிருவருநாம்

நயக்கும் பருவ மொன்றானோம்
நகரை நதியே கரைமரமே
நலமே பெருகும் பானலமே
நத்தே முத்தே கேட்பீரே. (உ)

கடை மடக்கு.

வெள்ள முறுநன் னதிக்காலே
விருப்பா மதன்ற னதிக்காலே
மிக்க வளங்கூர் கல்லணையே
வெறுப்பா மெனக்கங் கல்லணையே

தெள்ளு திரைமென் றுளிப்பொறியே
தியங்கு மனமென் றுளிப்பொறியே
திரையே கொழிக்கு மாமணியே
தேசங் கொழிக்கு மாமணியே

கள்ள மருந்தேன் றாமரையே
கைகள் குவித்தேன் றாமரையே
கந்தத் தடங்கா வியப்போதே
கனிவுற் றடங்கா வியப்போதே

வள்ள லெவரு மொருவடிவாய்
வருசே வகப்பாண் டியதுரைமேன்
மயலே படைக்கு மெனைத்தாயே
வைவள் பொறுப்ப தெனைத்தாயே. (௩)

கடை மடக்கு.

காதங் கமழு மாம்பலமே
காதம் புலிக்கு மாம்பலமே
கானம் பாடும் பிரமரமே
கணைக்கே துவுமாம் பிரமரமே

சீத வணிச்சம் போதுகளே
திறம்பு வணிச்சம் போதுகளே
செறிந்த வள்ளைக் கருங்கொடியே
செவிக்கே குயிலுங் கருங்கொடியே

ஓது நீரிற் படரிலையே
உனக்கென் போலும் படரிலையே
உள்ளூற் றிருக்குங் கன்னிகையே
யொருத்தி நானுங் கன்னிகையே

மாதர் தமக்கு மதவேள்போல்
வருசே வகப்பாண் டியதுரைமேன்
மயலே படைக்கு மெனைத்தாயே
யெவ்வுள் பொறுப்ப தெனைத்தாயே. (௪)

கடை மடக்கு.

பூவிற் பயிலும் பாலனமே
பொருவேம் பயிலும் பாலனமே
புனற்குட் பறக்கு முள்ளானே
பொருவேள் வருத்த முள்ளானே

தாவித் திரியுந் தாராவே
தண்மை மலர்கள் தாராவே
சாரு மின்னு ரைக்கணமே
சாரேன் மின்னு ரைக்கணமே

சேவற் காவல் வாரணமே
செல்லா தாவல் வாரணமே
சிறக ரசைக்குஞ் சிச்சிலியே
சிறிது மெனைநே சிச்சிலியே

வாவிக் கயமுன் றுதித்தழைக்க
வருசே வக்பாண் டியதுரைமேன்
மயலே படைக்கு மெனைத்தாயே
வைவள் பொறுப்ப தெனைத்தாயே. (ரு)

முன் சிவபெருமானுக்கும் தருமகிரிக்குஞ் சிலேடை.
பின் தாமரைப்பூவுக்கும் தலைவிக்குஞ் சிலேடை அடிமடக்கு.

கங்கை மேல்வீற் றிருப்பதனாற்
காப்பா மரவஞ் செறிவதனாற்
கரிய வெண்கைத் தலங்கொளலாற்
கண்ணு மூன்று கொண்டமையான்

மங்கை யொருபா கனுக்கிணையாய்
மருவுந் தரும கிரிக்கதிபன்
மால்சே வகப்பாண் டியத்திருவன்
மனதுக் குகந்த நதித்துறைவாய்க்

கொங்கை யிடங்கொண் டடரகின்றீர்
கொங்கை யிடங்கொண் டடரகின்றேன்
கோவைக் கனிவாக் கிதழ்படைத்தீர்
கோவைக் கனிவாக் கிதழ்படைத்தேன்

சங்கை யகலா திலையடுப்பீர்
சங்கை யகலா திலையடுப்பேன்
சலசப் போதே கலைமதிப்பிஞ்
சலசப் போதே மெலிவேனே. (கா)

புலிக்கும் தருமகிரிக்குஞ் சிலேடை.

கதியே விளக்கு மறம்படைத்துங்
காய முழுதும் புளியையுற்றுங்
கலையே யடுத்து முனிமலையக்
காலு நாலு நகமாகிப்

பதிவாய் மேலா யெழுந்துவியப்
பதிறு றடிதா விடப்பொலிந்தும்
பார்க்குங் கண்ணன் கழல்போன்றும்
பலமே விளக்குந் தருக்கொடென்று

மதியா தவரு மதிக்கவுயர்
மாண்பாற் புலியே போற்பெருமை
வளர்க்குந் தருமகிரிக்கதிபன்
மால்சே வகப்பாண் டியத்திருவன்

துதிசேர் சேறைப் பதிபுரக்குந்
துரைமே லாசை கொண்டவென்போற்
றுலங்கு மலருற் றணைகடந்த
தோற்றம் புகலாய் நகராயே. (எ)

சிவபெருமானுக்குந் தேவியாற்றுக்குஞ் சிலேடை.

நாடுங் கிரிகை தவமதின்முன்
னதியே யாகிச் சிவகிரியி
னண்ணு மெல்லை காட்டியுமை
நாமந் தரித்துப் பதந்தெரிந்து

கூடும் பலர்க்கும் பயனுதவு
குணத்தாற் சிவனே நிகராகக்
குலவுந் தேவி நதிக்கதிபன்
குணசே வகப்பாண் டியராசன்

பாடுந் தமிழோர்க் கிருநிதியம்
படைப்போன் றன்பாற் றாதுரைத்துப்
பண்பா மாலை பெற்றுவரும்
பரிசுக் கெவர்பா ணுரைப்பன்

நீடுந் திரைசூழ் நகரைநதி
நிறைநீர்க் கயத்து ளொருதாளி
னிற்குங் கமல மதுகரமே
நெகிழுங் கடக மதுகரமே.

முன் குமரவேளுக்கும் ஆண்மறை நாட்டுக்குஞ் சிலேடை.
பின் மதன் செய்கைக்கும் சங்குக்குஞ் சிலேடை.

அணிவா ரணந்தோ யிடக்கயமும்
அயமே யியவா கனப்பொலிவும்
ஆறு முகங்கூர் திருவழகும்
ஆம்பற் சுதையார் செம்மணமும்

திணிசேர் நாக மலைக்குகன்போற்
செழித்து வருமாண் மறைநாட்டுத்
திருவ னுயர்சே வகப்பாண்டிய
சீமான் நகரை நதித்துறைவாய்

தணியா மோக மிகுந்தேனே
தண்கு வளைக்குட் புகுந்தேனே
தழைக்கும் பாரு மலர்க்கொத்தே
தளர்ந்தேன் பாரு மலர்க்கொத்தே

மணியே யுதவு கருப்பமய
மாநாண் மலரே யடுத்திருந்தாய்
மன்ம தவள வாரணமே
வருமோ தவள வாரணமே. (௯)

முன் வேயிலுகந்த விநாயகர்க்கும் சேறைநகர்க்குஞ் சிலேடை.
பின் மதனுக்கும் நகரைநதிக்குஞ் சிலேடை.

கும்பம் பொலிய வெயிலுகந்து
கூறும் பொறியுங் கயமுகமுங்
கொண்டு பெரிது தரந்தாங்கிக்
கோட்டை வாயிற் கொடுதிகழ்ந்து

தம்பம் பொருந்து மகத்துவகை
தழைப்ப வாகுப் பரிகையுற்றுத்
தயையே புரியைங் கரக்களிற்றைத்
தானே நிகர்தென் சேறைநகர்க்

கம்பன் சவியெல் லாந்தெரிந்த
கனவான் புகழ்ச்சுந் தரதாஸ
காமன் றருசே வகப்பாண்டிய
கன்ன னகரை நன்னதியே

அம்புஞ் சிலையு மேலெடுத்தாய்
அடுக்கு மடல்சேர் வாளையுற்றாய்
அனங்கன் போன்று யுனையுறவென்
றடைந்தேன் விரக மிடைந்தேனே. (௫௦)

முன் கோரநதிக்கும் குதிரைக்குஞ் சிலேடை.
பின் கடைமடக்கு

வாரங் குலவக் கல்லணையும்
மருவக் கச்சங் கொண்டுசூழி
வாய்ந்து கால்பாய்ந் துளையடர்ந்து
மணிவாய்ப் பலகா ணிடநடந்து

கோர மெனும்பே ராய்ப்பணைக்குட்
குலவுஞ் சிறப்பாற் கோரநதிக்
குவமை தருவாம் பரிநடந்துங்
கோமா னண்ட லாரைவென்று

வீரம் பெறுசே வகப்பாண்டிய
விசைய னகரை நதித்துறைவாய்
மிகுந்த வண்டா னத்தாரே
மிடைவார் வண்டா னத்தாரே

மாரன் சிலைப்பா லுளநாணே
மடவார் சிலைப்பா லுளநாணே
மருவுற் றேன்போ தற்பலமே
மற்றென் னுடம்போ தற்பலமே. (கக)

தேவியாற்றுக்கும் யானைக்குஞ் சிலேடை.

தானந் தழைத்தங் குசநிமிர்த்துத்
தாங்கு மிரண்டு கோடுகொண்டு
சலத்தாற் பாகை யடர்த்துமைக்கண்
டனையே மருவிப் பலனடைந்து

வானந் தொடுது திக்கையுற்று
வளையுஞ் செவியு முறநேர்ந்து
வளமே பரவுந் தேவிநதி
வரவே போலு மதகளிற்றான்

கானந் தனிற்பொன் மான்மிசையோர்
கணையே தொடுத்த ரகுராமன்
கருணைத் துரைசே வகப்பாண்ட்ய
கர்த்த னகரை நதித்துறைவாய்

மீனம் பருகுங் கின்னரமே
வெறுத்தே னிசைக்குங் கின்னரமே
மிகுந்த வலிமே னடந்தானே
வேளும் வலிமே னடந்தானே. (௧௨)

(அல்லிமேனடந்தான்) ஓர் நீர்ப்பறவை.

நாகமலைக்கும் முல்லைமாலைக்குஞ் சிலேடை.

முருகே யமைய நாரதனுன்
முடித்தே சுற்றிப் போற்றவிசை
முயல்கண் மருவ மின்னார
முதப்ப யோத ரந்தழுவிப்

பெருகு நாக மலைபோலப்
பிறங்கு முல்லை யணிமார்பன்
பெற்ருள் பதத்தைப் பணிந்துவரம
பெறுசே வகப்பாண் டியராசன்

குருகு லேசன் சிவிகைமிசைக்
குலவும் போது கவிகைமிசைக்
குளிர்வெண் மதியம் வரப்பார்த்தேன்
குடைக்கு நிகரன் றெனவார்த்தேன்

உருகு மிருட்பா லெழுந்ததுவே
உருப்பும் வடவைக் கொழுந்ததுவே
உரவோன் காக்க வருமாறே
யுரைப்பா ரெவர்சொல் வருமாறே. (கரு)

கடலுக்கும் மாதர் முலைக்கும் முரசுக்குஞ் சிலேடை

ஆர வார மிகப்பொருந்தி
யணிந்த வாராற் பந்தமுற்று
மமர்வே ளாண்மை வரைநிலைமை
யாகிக் கனங்கொண் டரிவையர்கள்

பார தனமுங் கடலுமென்ப்
பகர்மும் முரசான் குலகுருவைப்
பரவி வருசே வகப்பாண்ட்ய
பார்த்த னெழிலைப் பார்த்துவந்தேன்

சேர வருவாய் கானிடமே
சேறை யுனக்குத் தானிடமே
சிலரே சலுக்கு நானிடமே
தெரிவை நானோர் மானிடமே

வீர மாரன் றனகத்தே
விரைந்து போதெய் தானகத்தே
விளங்க மோக மானதியே
மிகநான் மோக மானதியே. (கச)

முன் கருடவாகனத்துக்கும் கருடகேதனத்துக்குஞ் சிலேடை.
பின் தலைவன் கருணைக்குணத்திற்கும் நகரைநதிக்குஞ் சிலேடை.

அரிமண டலங்கொண் டிடப்பொரலால்
ஆங்க வினைதை யுதவுதலால்
அணியம் பரத்தே யெழுதலினால்
அரிய துவச மெனக்கொளலால்

உரிய கருட வாகனம்போல்
உலவுங் கருட கேதனத்தான்
உண்மைத துரைசே வகப்பாண்ட்யன்
உலகம் புரக்கு மனுவேந்தன்

பெரிய கருணைக் குணம்போலப்
பிரியா தகந்தண் ணளிதாங்கிப்
பேணிச் சங்கந் தனைப்புரந்து
பேதங் கலக்க மறத்தெளிந்து

புரியு மீகை யிருகையினும்
பொருந்தி யரசுக் கிசைவாகிப்
போந்த நகரை நதிப்பெருக்கே
புரிந்தார் மாத ருளத்தருக்கே. (௧௫)

முன் சூரியனுக்கும் ஆக்கினைக்குஞ் சிலேடை,
பின் கடைமடக்கு.

மருவார் குமுத தளம்பதைப்ப
வனவல் லியந்தா மரைநயப்ப
வலங்கூ ரொற்றைத் திகிரியினால்
வையந் தனைநன் னெறிநடத்தித்

திருவார் பெருமைப் பாற்கரன்போற்
செங்கோல் செலுத்து மாணையினான்
செல்வத் துரைசே வகப்பாண்டி
தீரன் நகரை மாநதியே

பெருவா ரிதிபோ யமர்வாயே
பிழைப்ப னேவே ளமர்வாயே
பெருகு மதியு மருந்திருட்டே
பெற்றார் மதியு மருந்திருட்டே

தருவார் கரைமேற் சம்பகமே
தைக்கு மதனஞ் சம்பகமே
சார்ந்தே யடையுங் கருங்கிளையே
சகிக்கா தோதற் கருங்கிளையே, (கசு)

பெரியகோவிலுக்கும் பிராவடியாற்றுக்குஞ் சிலேடை.

சம்பு வளர வருளுடையார்
சார்பா யந்தத் திருமலையுந்
தழுவச் சேர னம்பலமேற்
றங்க வெண்பூ தங்காப்பக்

கொம்பு தொறுமாங் குயிலிருந்து
கூவும் பொழில்சூ ழும்பெரிய
கோவில் போலும் பிராவடியாங்
குலவும் பெரிய நதிக்கதிபன்

வம்பு லாவு மலர்மார்பன்
மால்சே வகப்பாண் டியத்திருவன்
மகிழ்கூர் நகரை நன்னதியே
மலருற் றதுவேள் சன்னதியே

பம்பு நுரையே புற்புதமே
பகரென் னுரையே வற்புதமே
பாயு மனேகஞ் சலசரமே
பலவே மதற்கஞ் சலசரமே. (கஎ)

முன் மலயக்காற்றுக்கும் மனமாக்கியாற்றுக்குஞ் சிலேடை—
பின் மடக்கு. தலைவிக்கும் நகரைநதிக்குஞ் சிலேடை.

சாந்த மிசைந்த கிலந்தோய்ந்து
தக்க தான நெறியடைந்து
சரமாம் பூவ ணேரிவரச்
சார்ந்து மதனப் பயிர்வளர்த்தே

ஆய்ந்த மலையக் காற்றைநிகர்
ஆகிச் செழிக்கு மனமாக்கி
ஆற்றுக் கதிபன் மழைமுகில்போல்
அருள்சே வகப்பாண் டியத்திருமால்

ஏந்தம் புயத்துக் கிச்சைவைத்தேன்
இனிதம் புயத்துக் கிச்சைவைத்தாய்
எவரும் பயமே காட்டவந்தேன்
இவரும் பயமே காட்டவந்தாய்

வாய்ந்த குசங்கள் புடைக்கநொந்தேன்
வளர்ந்த குசங்கள் புடைக்கநொந்தாய்
மயலை யடைந்தே னெனைப்போல்வெம்
மயலை யடைந்தாய் மாநதியே. (சஅ)

முன் ஆதிசேடனுக்கும் அட்டகோணமாலுக்குஞ் சிலேடை.
பின் கடைமடக்கு.

கனகங் குயின்ற படத்தாலும்
கதித்த நீலத் தூணாலும்
கற்பந் தனைமிஞ் சுதலாலும்
கட்டுப் படிமேற் கொளலாலும்

உனத விண்டு வசத்தாலும்
உடனெட் டுறுகோ ணத்தாலும்
ஓங்கு மனந்தன் போலுமென
ஒளிர்சிங் கார மாலுடையான்

வஞ்ச மலரிற் குடியிருக்கும்
வனிதை யகலா துவந்திருக்கும்
வளஞ்சூழ் சேறைப் பதிபுரக்கும்
மால்சே வகப்பாண் டியத்துரையாம்

அனபா யனையே நினைந்திருந்தேன்
அனைமா ரெவருக் குந்திருந்தேன்
அருவ நகரா னதித்துறையே
அடங்கா நகரா நதித்துறையே. (௪௬)

முன் இந்திராணி அரண்மனைக்குஞ் சரசுவதிமாலுக்குஞ் சிலேடை.

பின் தலைவனுக்கும் நகரைநதிக்குஞ்சிலேடை மடக்கு.

திருவு லாவும் பலவணியும்
சிறந்த மணிமே கலையுமுயர்
சிந்தா மணியு மிருபொருளும்
தினமுந் தமிழ்நூற் றிடுமியல்பும்

மருவுஞ் சசிமா தரண்மனைபோல்
மதிக்கு மெழில்சேர் சரசுபதி
மா லுக் கதிபன் றென்சேறை
வளர்சே வகப்பாண் டியத்துரையாம்

நிருபன் முல்லை மாலை யுற்றான்
நீயு முல்லை மாலையுற்றாய்
நேரே தரும மலைக்குகந்தான்
நீரே தரும மலைக்குகந்தாய்

பருவ மதனைப் போல்வருவான்
பருவ மதனைப்போல்வருவாய்
பார்த்தி வனைப்போ லுயர்நதியே
பூதலா ஒமனக்கங் குயர்மதியே, (உ0)

முன் கருங்கடலுக்குக் கல்யாண மாலுக்குஞ் சிலேடை.
பின் கடைமடக்கு.

மாலுக் குகந்த விருப்பாலும்
மதிக்கப் பாலோங் குதலாலும்
வணங்கார் பரவ வரலாலும்
வரமு நிலைபெற் றிடலாலும்

கோலப் பன்னீர் மணத்தாலும்
கூர்மங் கலங்கொண் டிடலாலும்
குளிர்தென் டிரைநீர்க் கருங்கடலொக்
குங்கல் யாண மாலுடையான்

வேலுக் குகந்த பரங்கிரிச்செவ்
வேளை வேளை தொறும்பரவும்
விந்தை பெறுசே வகப்பாண்டிய
விசைய னகரை நதித்துறைவாய்ச்

சாலக் கரைமே லமர் முருக்கே
சாரு மோவே ளமர் முருக்கே
தாரை தருமுட் கருவேலே
தடங்க ணுமுட் கருவேலே. (உக)

மூன் திருக்கணீசுரர்க்குந் தருமசத்திரத்துக்குஞ் சிலேடை.
பின் கடைமடக்கு.

பாகத் தமலை கனிவிருந்து
படைத்துப் பசுப்பா னேயமிட்டுப்
பாய சரச வாரியுறப்
பாங்கா விளக்கந் தருவதனால்

வாகத் துலவு திருக்கணர்போல்
மருவுந் தரும சத்திரத்தான்
வாணர்க் கருள்சே வகபாண்டிய
வள்ள லாகரை நதிக்கரைமேற்

பூகத் தமரும் பழுக்காயே
புலந்தே னுடல்வெம் பழுக்காயே
புறஞ்சூழ் தெனம்பன் னுடைகளே
பொருந்தா தெனம்பன் னுடைகளே

நாகத் துலவு மரம்பைகளே
நயமோ வெனக்கவ் வரம்பைகளே
நறுந்தே னொழுகும் பலதாற்றே
நவின்றேன் பிறரம் பலதாற்றே. (உஉ)

முன் குமரகோவிலுக்குங் கோடிக்காலுக்குஞ் சிலேடை.
பின் கடைமடக்கு.

கந்தந் தருவள் ளிக்கொடியாற்
கவின்கூர் நாக வல்லியினாற்
கண்ணி வனைந்த முனிக்குலத்தாற்
கனவே லிளையமன் னுறுதலினாற்

சந்தந் தருகு மரகோவில்
சாலுங் கொடிக்கால் சூழ்சேறைத்
தனத னுயர்சே வகப்பாண்டிய
சாமி நகரை நதித்துறைவாய்

நந்தந் தருநித் திலத்தாரே
நம்பார் மாணித் திலத்தாரே
நவியா வருவ ராவினமே
நவிவே னருவா ராவினமே

பந்தந் தருகல் லாமைகளே
பரிந்தார் மனங்கல் லாமைகளே
பரவு மோயா நண்டுகளே
பகரு மோயா னண்டுகளே. (௨௧)

முன் முக்குணத்துக்கும் எக்கணத்துக்குஞ் சிலேடை.
பின் கடைமடக்கு.

செய்ய வயன்மால் சிவவடிவாச்
சேர வருவி மலையுதவச்
செழித்து மேலோர் புதுக்குளத்துச்
செய்நீர் முழுதுந் தனதாக்கித்

துய்ய தொருமுக் குணம்போலத்
தொடர்ந்தெக் கணமும் விளைவேறித்
துலங்கெக் கணஞ்சூழ் வளநாட்டுத்
துரைசே வகப்பாண் டியராச

மெய்ய னணைய வரும்படிக்கே
விழைந்தே னகராய் வரும்படிக்கே
வேண்டு வாரோ வரும்படிக்கே
வேளா ளுள்ளங்க வரும்படிக்கே

கொய்யம் பணிச்ச வரும்படிக்கே
கொங்கை மேரு வரும்படிக்கே
கொழுங்கண் முத்தி வரும்படிக்கே
கொடிநின் றேனி வரும்படிக்கே. (உச)

அடிமடக்கு.

வரையே பொருந்த மலர்வாய்த்து
வரையே யமைத்தின் னிசைவளர்த்தை
வரையே கருணை யொடு புரந்த
வரையே நிகர்த்தோ னுயர்ந்ததிரு

வரையே முளைத்த சேவகத்தே
வரையே துதிப்போன் சேறைநகர்
வளர்சே வகப்பாண் டியத்திருவன்
வளர்க்கும் புகழ்போல் வளர்நதியே

வரையே கடவா வொலிமுரசு
வரையே முழக்கு மொருமதன்ற
வரையே வளைத்துத் தொடுசாப்ப
வரையே சொலப்போ தாதிவிதி

வரையே தெவ்வை தாயருந்தெவ்
வரையே நிகர்க்க வருவாரோ
வரையே யிருக்குங் குருகேயே
வரையே யுறவென் றடுப்பேனே. (உரு)

கடைமடக்கு.

கல்லால் வானந் தடுத்துவந்தோன்
கையால் வானந் தடுத்துவந்தோன்
காலி னான்முன் னுலகளந்தோன்
கருணை யான்முன் னுலகளந்தோன்

வில்லால் வருதெவ் வரையடர்த்தோன்
வெள்ளத் தரியால் வரையடர்த்தோன்
மிதிக்குங் கலைமா னுப்படைத்தோன்
விளங்குங் கலைமா னுப்படைத்தோன்

சொல்லால் வளருந் தமிழ்ச்சேறைத்
துரைமேச வகப்பாண் டியத்திருவன்
சுகந்தந் தானே யெனினதிக
சுகந்தந் தானே பெறுநதியே

மல்லான் மதற்கு மெலியேனே
வனச மதற்கு மெலியேனே
மடங்கா யனுகூ லந்தானே
வைப்பா யனுகூ லந்தானே. (உ௩)

உவமை விலக்கு.

திருமா லிவனே யென்னிலவன்
தினமுங் கடன்மேல் வீற்றிருப்பன்
தேவர் பெருமா னெனிலவனைத்
தெரிந்தோர் பலக்குப் போகியென்பர்

ஒருமா மதவே ளெனிலவன்போர்
உற்ற போதஞ் சிடுகுணத்தான்
உயர்ந்த வள்ள லெனிலதிலும்
ஒருவன் பாரி யாயிருப்பன்

நிருபா திபரை நிகருரையா
நிருபன் சேறைப் பதிபுரக்கும்
நீதத் துரைசே வகப்பாண்டிய
தேசத் துரையாந் தருமதுரைப்

பெருமான் கவிஞ ரனைவருக்கும்
பெட்பா லனந்தந் தேபுரக்கும்
பிரபுத் துரைமுத தமிழ்வளரப்
பேறுவு ளார்க்கும் புகழோனே. (உ.எ)

கவிவாணருக்குங் களஞ்சியத்துக்குஞ் சிலேடை.
பின்மடக்கு.

சீரே யவிரும் படிமருவச்
சேர்முத் தகமுங் குளகமும்பல்
செய்யுள் விளைசொற் பெருக்கமிக்குத்
திருமன் னவரை யுயர்வாக்கி

நேரோ கவிஞ் னிலையமைக்கும்
நீராற் கவிஞர் தமைநிகர்த்து
நிகமும் படிக்குப் படியளக்கும்
நெடிய மதில்சூழ் களஞ்சியத்தான்

காரே யெனவெண் கவிகையினான்
கலைபே நிகர்வெண் கவிகையினான்
கமலை வளரும் புயத்திருவன்
கனசே வகப்பாண் டியத்திருவன்

பேரோ யெனக்குப் பாக்கியமே
பேசு மிதுசலாக்கியமே
பெரிய நதியே யோக்கியமே
பெருகப் புகலோர் வாக்கியமே. (உஅ)

விரும்புஞ் சுகத்தைத் தூதுவிட்டால்
வில்வே ளாணை கடந்துமனு
வேந்தர் பெருமா னெனைத்தழுவி
மேவுஞ் சுகத்தைத் தாராதே

சுரும்பும் வெறிகொண் டதனாற்போய்ச்
சொல்ல நினைவு கூடாதே
சுகந்தந் தருமந் தாநிலமுஞ்
சொல்லி விரைந்து வாராதே

இரும்புங் கரையப் பேசுகுயில்
என்சொற் கஞ்சி யிருந்ததுவே
எவரைத் தூது விடுப்பமென
எண்ணும் போது போதுலவும்

அரும்பு முலைப்பெண் போலொருத்தி
அருட்சே வகப்பாண் டியத்துரையாம்
அரசர் பெருமான் மகிழ்நகரை
அணங்கே யுனைப்போ லடுத்தாளே (உ௯)

அடுத்து வருமா னெனக்கிரங்கி
அகங்க வருமான் மதித்துமயல்
ஆக வருமான் மதக்குழலார்
ஆய்ந்தே வருமான் மருமானோ்

தொடுத்துப் புகழும் வடிவழகன்
சுகசே வகப்பாண் டியராச
சுமுகன் சமுகத் தெனது செயல்
சொல்ல வவன்பொற் புயமாலை

கொடுத்து மணிமா லையுந்தயவுங்
கொடுத்தா னவளென் கைக்கொடுத்தாள்
கோடி தனம்பெற் றவரெனக்கண்
கொண்டேன் னிரண்டு தனம்புனைந்தேன்

உடுத்துந் துகிலும் புனைவளையும்
உகந்து மகிழ்ந்து விழிதுயின்றேன்
உற்றான் மதன்போற் கனவிலெங்கோன்
உரிமைக் கலவி புரிந்தானே. (௩௦)

இந்தச் சுவர்க்கந் தையலைபுற்
றிருப்ப தானற் பந்தயமே
யில்லை யிதற்குப் பந்தயமே
யியம்ப லாமென் றெனையடுத்துச்

சந்தச் சேறைப் பதிவளர்மூத்
தமிழ்ச்சே வகப்பாண் டியதுரைமால்
தனதா யுதமா மென்கழுத்தைத்
தழுவி யோதி தனைக்கோதிக்

கந்தச் செழுந்தா மம்புனைந்து
காம ராச னரண்மனையின்
கனவா சலிற்கட் டரம்பைகளைக்
கனிவாய்த் தன்னூ ருக்குவிட்டுச்

சொந்தத் தைந்து விதக்கலவி
சொலுங்கொக் கோக முறைப்படிசெய்
துகந்தா னகரை நதியணங்கே
சுகித்த சுகமென் சொலுவேனே. (௩௧)

இசைவாணருக்கும், தலைவி தலைவனைச்சேர்ந் தனுபவித்த வகைக்குஞ் சிலேடை.

வாழ்த்து.

இராகம் பொருந்தப் பலவிபதம்
இனய சுரதந் திரம்பயின்றும்
இயல்சா ரங்கஞ் சுகங்காட்ட
இசைவா ணரைப்போற் கவிவாணர்

பராவும் புகழ்சேர் தென்சேறைப்
பதிச்செந் தமிழ்ச்சுந் தரதாசு
பாண்டிய னருள்சே வகப்பாண்டிய
பார்த்தன் றனைச்சேர்ந் தனுபவித்தேன்

நரா திபருக்கெல் லாம்புகழை
நாட்டுஞ் சேறைப் பதிவாழி
நங்கள் பெருமான் வாழியருள்
நன்மைந் தருஞ்சுற் றமும்வாழி

வராக நெடுமா ணுடசிவன்
மலர்த்தாள் வாழி யெனக்குயிராய்
வளரும் நகரை நதிநீயும்
வாழி தமிழும் வாழியவே. (௬௨)

நதிவிலாசம் முற்றும்.

நதிவிலாசக் குறிப்புரை.

முதலாவது செய்யுள்.

பாட்டுடைத்தலைவன் பவனிக்கு :—பொன்னும் அணியும் புனைந்து-இலக்குமியையும் அழகையும் தாங்கி. வளம் பொருந்தப் புவனம் தழைத்தோங்க-செல்வம் பொருந்த உலகம் செழிப்புற்று உயர. புலவரையுமே புரந்து-வித்துவான்களையும் காத்து. பலம் புயமே தாங்கி-வலிமையைப் புயத்திற்ருங்குதலுற்று. தமிழ்வளர்த்து - தமிழ்ப்பாஷையை ஆதரித்து. பன்னும் சேறைவரவமைத்து. (யாவரும்) புகழ்ந்து கூறும் சேறை நகரத்தில் வருகை அமையச் செய்து. பரவும் தேவர் புடைசூழ - விசாலித்த தேவர் என்னும் ஜாதியார் பக்கமே சுற்றிவர. பணைசேர்ந்தொலிப்ப - (பதினெட்டு வகை) வாத்தியங்களும் (ஒருங்கு) சேர்ந்து முழங்க. சுழிசிறந்து பாயும் கனவட்டமும் படைத்து - அசுவ இலக்கணநூலார் கூறும் நல்லசுழிகளெல்லாம் சிறப்பவுற்று ஐங்கதியிற் பாய்ந்து செல்லும் கனவட்டமென்னும் பெயரிய குதிரையை அமைத்து. மன்னும் தந்தாவளத்துலவி - நிலைபெற்ற யானைமீது பிரகாசித்து. வளரும் புகழ்ச்சேவகப்பாண்டிய மன்னன் பவனிபோல் - நாளுக்குநாள் பூர்வபக்கச் சந்திரனைப்போல வளர்கின்ற கீர்த்தியையுடைய (ஸ்ரீமத்) சேவகப்பாண்டிய மஹாராஜா அவர்கள் பவனிக்காட்சியைப் போல. எதிரேவந்தாய் நகரை நன்னதியே - என் எதிரில் வந்தாய் நகரையென்னும் பெயரிய நல்லநதியே!

இனி நதிக்குக் கூறுங்கால் :—பொன்னும் மணியும் புனைந்து - (சாதரூபம் சாம்பூநதம் முதலாக 1008 மாற்றுவரையுள்ள) பொன்னையும் (ஒன்பது வகைப்பட்ட) இரத்தினங்களையும் பொருந்தி. வளம்பொருந்தப் புவனந்தழைத்தோங்கு - நீர்செழித்துப்

பெருகு. அப்புலவரையுமே புரந்து - அப்பக்கங்களையுடைய மலை யையும் காத்து. பல் அம்புயமே தாங்கி - பல தாமரைமலர்களைப் பொருந்தி. தமிழ்வளர்த்து - இனிமையைவளர்வித்து பன்னுஞ் சேல்தைவர அமைத்து - மச்சம் மகரம் முதலாகப் பலதிறப்படக் கூறப்படுகின்ற மீன் இனங்கள் மேலேதடவிவரக்கொண்டு. பர வும் தேவர்புடைசூழ - யாவராலும் துதிக்கப்படுகின்ற விண்ணவர் கள் பக்கமே சுற்றிவர. பணைசேர்ந்து ஒலிப்ப - மருத நிலத்தைச் சார்ந்து முழங்கவும். சுழிசிறந்து - நீர்ச்சுழிச்சிறப்பெய்தி. பாயும் கனவட்டமும் படைத்து - அச்சுழிகளுடன் பாய்ந்து செல்வன வாகி மிக்கவட்டமான சுழிகளையும் அடைந்து. மன்னும் தம் தாவளத்துலவி - நிலைத்த தம் இருப்பிடத்தே விளையாடி. (எனப் பொருள்கொள்க) இங்ஙனமாகிய நதியே! முன்னும் அதிக வரம் பையுற்றாய் - எதிரிலும் மிக்க வரம்புகொண்டுள்ளாய். (நானும்) முன்னும் மதிகவர் அம்பையுற்றேன் - நினைக்கின்ற மனத்தைக் கவரும் படியான புஷ்பபாணங்களையடைந்தேன். பிறவெளி.

2-வது செய்யுள்.

தலைவிக்கு :—மயக்கந்தரித்து-காமமயக்கத்தைமேற்கொண்டு, வளைஎறிந்து-வளையல்களைவீழ்த்தி. மலைவு ஆய்வருந்த கவலையுற்று- (மனம்) மலைத்தல் உண்டாகி வருத்தமடையத் துன்படைந்து. வாகுஆர்-(தலைவன்) புயத்திலணியப்பெற்றுப் பொருந்திய. முல்லை க்கு இசைவு ஆகி - முல்லைமாலைக்கு மனப்பொருத்தமுளதாகி. மரு வும்படி கவனம் படைத்தேன் - (தலைவனைச்) சேரும்படி எண்ணங் கொண்டேன்.

நதிக்கு:—மயகம் படைத்து - அழகிய நீரைக்கொண்டு. வளை யெறிந்து - சங்குகளை (இருகரைகளிலும்) வீசி. மலைவாய் வரும்

தக்க அலையுற்று - (தருமாசலமென்னும்) மலையிடத்திருந்து வருவனவாகிய பெரிய அலைகலைப்பொருந்தி. வாகார் முல்லைக்கு இசைவாகி - அழகார்ந்த முல்லை நிலத்திற்குப் பொருந்துவதாகி. மருவும் படிக வனம் படைத்தாய் - பொருத்தமான ஸ்படிக வர்ணத்தையடைந்திருக்கின்றாய்.

செயக்கந்தருவம் - வெற்றிக்குதிரை. பானலம் - நீலோற்பலம் நத்து - சங்கு. மற்றவைவெளி.

3-வது செய்யுள்.

நதிக்காலே - நதியிலிருந்து பிரிந்துவரும் கால்வாயே. விருப்புஆம் - ஆசைஉண்டாகின்றது. (எதனாலெனின் ?) மதன் தனது இக்காலே - மன்மதனுடைய கரும்புவில்லாலே. கல்லணையே-நதியிடத்துளதாகிய கற்களாலமைவுற்றஅணையே. (கல்லணையென்பது அங்குள்ள ஒருபெரிய அணையின்பெயர்) அல் அணையே - இருளும் படுக்கையுமே. துளிப்பொறியே - நீர்த்துளியாகிய தீப்பொறியே. அனம் என்றளி பொறியே தியங்கும் - சோறு என்ற இடத்து மனம் வருந்தும். மாமணியே - மாணிக்கங்களே. தேசு அங்கு ஒழிக்கும் ஆம் அணியே - (அங்கு ஆம் அணியே தேசு ஒழிக்கும்) அப்பொழுது ஆகிய அணிகளே (என்) அழகை நீக்கும். தாமரையே - தாமரை மலர்களே. தாமரையே-(முல்லை) மாலையையணிந்த தலைவரையே. கந்த தடம் காவி அப்போதே—மணமுள்ள தடாகத்தில் தோன்றிய நீலோற்பலமாகிய அம்மலரே. வியப்பு ஓதே - ஆச்சரியத்தைக்கூறுக. எனை தாயே வைவள் - என்னை அன்னையே வைகுவள். பொறுப்பது எனைத்து ஆயே - (எனைத்துபொறுப்பது ஆயே) எவ்வளவுதான் சகிப்பது ஆராய்ந்துகொள்க.

4-வது செய்யுள்.

* ஆம்பலமே - ஆம்பல் மலர்களே. காது அம்புலிக்கும் ஆம் பலமே - வருத்துகின்ற சந்திரனுக்கும் பலமே ஆகின்றது. பிரமரமே - வண்டுகளே. ஆம்பிரமரமே - மாமரமே. சீத அனிச்சம் போதுகளே - குளிர்ந்த அனிச்ச மலர்களே. திறம்புவன் நிசசம் போதுகளே — (நிச்சம் போதுகளே திறம்புவன்) நிதமும் சாலங்கள் திறம்பலுறுவேன். கரும் கொடியே - பெரிய கொடியே. கருங்கொடியே - கரிய காகமே. படர் இலையே - படர்கின்ற இலையே. படர் இலையே - துன்பமில்லையே. கனனிகையே - மலர் மொக்குளே. கன்னிகையே - (விவாகமில்லாத) கன்னியே * ஆம்பலம் என்பதில் அம் சாரியை, மாம்பலமே எனக்கொண்டு மாம்பழமே யென்பதும் ஒன்று. அது இவண் சிறவாதென்க.

5-வது செய்யுள்.

பாலனமே - வெள்ளிய அன்னப்பறவையே. பொரு வேம்பு அயிலும் பால் அனமே - (அயிலும் பாலனமே பொரு வேம்பு) அருந்துகின்ற பாலுஞ் சோறும் வருத்துகின்ற வேம்புபோற் கசக்கின்றன. தாராவே - தாரா என்னும் நீர்ப்பறவையே. மலர்கள் தண்மை தாராவே - மலர்கள் குளிர்ச்சியைத் தருவனவல்லவே. நாரைக்கணமே - நாரைக்கூட்டமே. மின்னுரைக்கணமே சாரேன் - பெண்களே ஒருகணப்பொழுதும் சாரேன். சேவற்கு - சேற்றுக்கு, ஆவல் - விருப்பமுள்ள. வாரணமே - சங்கே. அல்வாரணம் - இருளாகிய மதயானை. * சிச்சிலியே - சிரற்புள்ளே. நேசிச்சிலியே - நேசித்தில்லையே. வாவிக்கயம் - தடாகத்தில் முதலையாற் பிடிக்கப்பட்ட கஜேந்திரன் என்னும் யானை. * சிசசிலி - பொன்வாய்ப்புள்ளெனினுமமையும்.

6-வது செய்யுள்.

சிவபிரானுக்கு:- கம்கைமேல் வீற்றிருப்பதனால் - பிரம கபாலம் கையின்மேலே வீற்றிருத்தலால். கர்ப்பு ஆம் அரவம் செறிவதனால் - கங்கணமாகிய பாம்பு சுற்றுவதால். கரிய எண் கைத்தலங்கொளலால் - பெரிய எட்டுத் தோள்களைக்கொள்ளுதலால். கண்ணும் மூன்று கொண்டமையால் - கண்களும் மூன்று (சோம சூரியாக்கினி) கொண்டதால்.

நருமதிக்கு:- கங்கைமேல் வீற்றிருப்பதனால் - ஆகாய கங்கா நதியானது உச்சியிற் றங்குதலால். கா பாமரவம் செறிவதனால் - சோலையாகப் பரவிய குங்கும மரங்கள் நெருங்குதலால். கரிய எண்கை தலம் கொளலால் - கருநிறமுள்ள கரடிகளை (தன்) இடத்துக் கொள்ளுதலால். கண்ணும் ஊன்றுகொண்டமையால் - மூங்கிலும் ஊன்றுதல் கொண்டதால்.

தாமரைப்பூவுக்கு:- கொங்கை - வர்சனையை. கோவைக் கனிவு ஆக்கு இதழ்=கண்ணை மகிழ்ச்சி செய்விக்கும் இதழ். சங்கை அகலாது இலை - சங்குகளைப் பிரியாது இலையை. சலசப்போதே- தாமரைமலரே.

தலைவிக்கு:- கொங்கை யிடங்கொண்டு அடர - தனங்கள் மார்பிடமெல்லாம் (பரப்பாற்) கொண்டு (ஒன்றோடொன்று) நெருங்க. கோவைக்கனி * வாக்கு இதழ் - கொவ்வைப்பழம்போலும் வாயிதழ். சங்கை - ஐயம். இலை - (இல்லை) வீட்டை. கலைமதி பிஞ்சு அலசு அப்போதே - கலைகளையுடைய சந்திரனின் இளம்பருவமான பிறை வருத்தும் அப்பொழுதே. * வாக்கு - வாய், தருமகிரியென்பது பாட்டுடைத்தலைவாது மலை.

7-வது செய்யுள்.

புலிக்கு:- கதியே விளைக்கும் மறம் - வேகத்தை மிகச் செய்யும் வலி. காயம் முழுதும் புளியை - சரீரம் முழுதும் புள்ளியை. கலையே அடுத்தும் - (கல்லையே) மலையையே அடுத்தும். முனிமலைய - (முன்னி) கருதித் தாக்க. காலு நாலும் நகம் ஆகி - நான்கு கால்களும் நகம் உண்டாகப்பெற்று. பதிவு ஆய் மேலாயெழுந்து-பதுங்கி மேலெழுந்து. விய பதினாறு அடி தாவிடப்பொலிந்தும்-பெருமையாகப் பதினாறடி தாவ விளங்கியும். பார்க்கும் கண் நன்கு அழல் போன்றும் - நோக்கும் விழி நல்ல நெருப்பை யொத்தும். (சுடுதலின்மையால் நன்கு அழல் என்றது) பலமே விளைக்கும் - தைரியத்தையே பெருக்கும். தருக்கொடு என்றும் மதியாதவரும் மதிக்க உயர் மாண்பால் - செருக்குடன் எப்பொழுதும் மதியாதாரும் மதிக்கும்படி உயர்வுபெற்றதன்மையால்.

தருமகிரிக்கு:- கதியே விளைக்கும் அறம் படைத்தும் - மோக்ஷத்தையே தருகின்ற தருமத்தை யடைந்தும். காயம் உழுதும் புள் இயையுற்று-ஆகாயத்தை வகிர்ந்தும் பக்ஷிகளைப் பொருந்தலுற்றும். கலையே அடுத்தும் - சுக்ரராசியையே, அல்லது சந்திரமண்டலத்தையே யடுத்தும், அல்லது மான்களையே யடுத்தும். முனி மலையக்காலும் நாலும் நகமாகி - அகத்தியமுனி வீற்றிருக்கும் பொதியமலையிலுற்பவிக்கும் தென்றற்காற்றும் அசைந்துலாவத்தக்க மலையாகி. பதிவாய் - புவியிடத்து. மேலர்யெழுந்து - மேலாக எழுந்து. உவி அப்பு அதின் ஆறு அடி தாவிட பொலிந்தும் - உச்சியிலிருந்தொழுகும் நீரினால் நதிகள் அடிவாரத்தில் ஓடிவர விளங்கியும். பார்க்கும் கண்ணன் கழல் போன்றும் - பூமிக்கும், ஆகாயத்துக்கும், விஷ்ணுவின் பாதமொப்பாகியும். பலமே விளைக்கும் தரு

சோடு - பழங்களைத் தருகின்ற மரங்களைக்கொண்டு. என்றும்- எக்காலத்தும். மதி ஆதவரும் மதிக்க - சந்திர சூரியரும் மதிக்கு ம்படி. உயர்மாண்பால் - மேம்பாடுற்ற தன்மையால். * பார்க்கும் என்ற உம்மையால் ஆகாயத்துக்கும் என வருவிக்கலாயிற்று. அடிப்பரப்பால் பூமியையும், மேற்பரப்பால் வானத்தையும் கவர்ந்து நிற்பதென்றபடி.

நகராய் - நகரைநதியே. ஆசைகொண்ட என்போல் - விகாரமுற்ற என்னைப்போல் (நீயும்). அலருற்று அணைகடந்த தோற்றம் புகலாய் - நீரையுற்று அணையைக் கடந்த தோற்றத்தைக் கூறுக. (யானும்) அலருற்று - பழிச்சொற்பெற்று. அணைகடந்தேன் - சயனத்தை நீங்கினேன்.

8-வது செய்யுள்.

சிவபெருமானுக்கு:—நாடும் கிரி கைதவம் அதின் - (அடியைத்) தேடும் (திருமாலாகிய) பன்றியின் வஞ்சனைக்கு. முன் அதியே ஆகி-முற்காலத்து எட்டாப்பொருளேயாகி. சிவகிரியின் நண்ணும் எல்லைகாட்டி - கைலாயமலையிற் சேரும் வரையறையைவிளக்கி. உமை நாம் அந்தரித்து - (உம்மை) வருபிறப்பின் வரும் அச்சத்தைக் கெடுத்து. பதம் தெரிந்து கூடும் பலர்க்கும் பயனுதவுகுணத்தால் - (தமது) திருவடிப்பெருமையறிந்து வந்து சேரும் (அடியார்) பலர்க்கும் நன்மையைத்தரும் தன்மையால். அதின் என்பது வேற்றுமை மயக்கம். அதற்கு என்பது பொருள்.

தேவியாற்றுக்கு:—நாடும் - (யாவரும்) விரும்பும். கிரிகை - கிரியைகளிலும். தவம் அதின் - தவசு செய்தலிலும். முன் - தியா

ணிக்கத்தக்க. நதியேயாகி - புண்ணியநதியேயாய். சிவகிரியின் நண்ணும் எல்லைகாட்டி - சிவகிரிச் சம்ஸ்தானத்துக்குப் பொருந்தும் எல்லையைக்காட்டி. உமைநாமம் தரித்து - தேவிநதி என உமையவள் பெயரைப்புனைந்து. பதம் தெரிந்து - காலமறிந்து.

9-வது செய்யுள்.

குமரவேளுக்கு:-அணி வாரணம் தோய் இடக்கயமும்-அழகிய சேவல் பொருந்திய கொடியும். அயம் மேவிய வாகனப்பொலிவும்-ஆடு பொருந்திய வாகனச் சிறப்பும். ஆம்பற்சுதையார் செய் மணமும்-தெய்வயானையம்மையார் செய்த திருமணமும்.

நாட்டுக்கு:-அணி வாரணம்தோய் இடம் கயமும்-அடுத்து சங்குகள் மூழ்கும் இடங்களையுடைய தடங்களும். ஆறுமுகம் கூர்திரு அழகும்-நதிகள் இடந்தோறும் மிகுகின்றபேரழகும். ஆம்பல் சுதை ஆர் செய் மணமும்-ஆம்பல் மலரின் தேன் நிறைந்த வயல் நாற்றமும்.

மடக்கு:—மோகமிகுந்தேன்-விருப்பமிக்கேன். புகும் தேன்-புகுகின்ற வண்டு. தழை கும்பு ஆரும் மலர்க்கொத்தே - இலைகளின் கூட்டமிக்கு நிறையும் பூங்கொத்தே. அலர்க்கு ஒத்து - (ஊரார்) பழிச்சொற்கட்கு எற்ப.

மதன் செய்கைக்கு:—மணியே உதவு கருப்பு அமைய - முத்துக்களை யீனும் கரும்பு (வில்லாகப்) பொருந்த. மா நாண் மலர் எ - வண்டுகளாகிய நாணையும் பூவாகிய அம்புகளையும். அடுத்திருந்தாய்- அடைந்தாய்.

சந்துக்கு:—மணியே உதவு கருப்பமயமா-முத்துக்களை யீனத்தக்க சூல் முதிர்ந்த மயமாக. நாண் மலரே அடுத்திருந்தாய் - அ

ன்றலர்ந்த மலர்களைச் சார்ந்திருந்தாய். (நின்னைக்காணும்போது மதனைக் கண்டாற்போலாகின்றது ஆதலின்) தவள வாரணமே - வெள்ளியசங்கே. மன்மத வள வாரணமே வருமோ - மன்மதனுடைய வளமான யானை (இருள்) வருங்கொல்லோ. அல்லது மன்மத வள ஆரணமே வருங்கொல், எனக்கொண்டு, மதனது செழிப்பான வேதம் (உனக்கு) வருமோ எனக் கூறலுமமையும்.

10–வது செய்யுள்.

வெயிலுகந்த விநாயகர்க்கு:—கும்பம் பொலிய - மத்தகம் விளங்க. வெயில் உகந்து - வெய்யிலை விரும்பி. கூறும் - சொல்கின்ற. பொறியும் கயமுகமும் கொண்டு - (புகர் என்னும்) புள்ளிகளையும் (அவை நிறைந்த) யானை முகத்தையும் பொருந்தி. பெரிது உதரம் தாங்கி - பெரிய வயிற்றைப்பொருந்தி. கோட்டை வாயில் கொடு திகழ்ந்து - தந்தத்தை வாயிடத்தே கொண்டு பிரகாசித்து. தம்பம் பொருந்தும் அகத்து - தஞ்சங்கூறும் மனத்துள். உவகை தழைப்ப - மகிழ்ச்சி மிக. ஆகு பரி கையுற்று - பெருச்சாளியாகிய குதிரையைக் (வாகனத்தை) கைக்கொண்டு.

சேறை நகர்க்கு:-கும்பம்பொலிய எயில் உகந்து-கும்ப இராசி (தன்மீது விளங்கத்தக்க) கோட்டையை மேவி. பொறியும் கயமுகங்கொண்டு- (சத்துருக்களைச்சங்கரிக்கும் பல) மதிற்பொறிகளையும் அகழி யிடங்களையும் கொண்டு. பெரிது தரம் தாங்கி - பெரிதாகிய தகுதிபெற்று. கோட்டைவாயில் கொடுதிகழ்ந்து - கோட்டை வாசலைக்கொண்டு விளங்கி. தம்பம்பொருந்தும் அகத்து வகை தழைப்ப - தூண்களமைந்த (பல) மாளிகை வகைகள் செழிப்ப. வாகு உப்பரிகையுற்று - அழகிய மேன்மேடைகளமைந்து.

மதனுக்கு:- அம்பும் சிலையும் மேலெடுத்தாய் - (மலர்ப்) பாண ங்களும் (கரும்பு) வில்லும் உயர எடுத்தாய். அடுக்கு மடல் சேர் வாளை உற்றாய் - அடுக்காகிய மடல் பொருந்திய (தாழை மலரா கிய) வாளாயுதத்தைப் பொருந்தினாய்.

நகரைநதிக்கு:- அம்பும் சிலையும் மேலெடுத்தாய் - நீரையும் ஒலியையும் மேலே எடுத்தனை. அடுக்கும் அடல் சேர் வாளையுற் றாய் - அடுத்த வலிபொருந்திய வாளைமீன்களைப் பொருந்தினை. (இக்குணங்களால்) அநங்கன் போன்றாய் - மன்மதனை யொத்தாய். விரகம் மிடைந்தேன் - காமவேட்கை மிகப்பெற்றேன்.

11-வது செய்யுள்.

கோரநதிக்கு:—வாரம் குலவ கல்லணையும் மருவ - கரைகள் விளங்கவும் கல்லணையென்ற பெயரியதோர் அணைபொருந்தவும். கச்சம்கொண்டு - ஆமைகளைக்கொண்டு. சுழிவாய்ந்து - நீர்ச்சுழி பொருந்தி. கால்பாய்ந்து-வாய்க்கால்களிற் பாய்ந்து. உளை அடர்ந்து- சேற்றிடங்களை நெருங்கி, மணிவாய் பலகானிடம் நடந்து - ரத்த துக்களை யகத்துட்கொண்ட பல காடுகளினிடஞ்சென்று. கோரம் எனும் பேராய் - கோரநதி என்ற பேர் ஆகி. பணைக்குள் குலவும் சிறப்பால் - மருதநிலத்துள் விளங்கும் பெருமையால்.

குதிரைக்கு:—வார் அங்கு உலவ கல்லணையும் மருவ - தோல் வார்கள் அங்கேவிளங்கச் சேணத்தைப் பொருந்தி. கச்சம்கொண்டு- அங்கவடியைப்பொருந்தி. சுழிவாய்ந்து - நற்சுழிகளைப்பெற்று. கால் பாய்ந்து-காற்றைப்போல், அல்லது காலால் தாவி. உளை அடர்ந்து- பிடரிமயிர் நெருங்கி. மணிவாய்ப்பலகான் இடநடந்து - அழகு வாய்க்கக் கடிவாளம் பூட்டச்சென்று. கோரம் எனும் பேராய்-கோ

ரம் என்ற பெயரையுடைத்தாகி. பணைக்குள் குலவும் சிறப்பால் - குதிரைப்பந்திகளிலே விளங்கும் சிறப்பினால். அண்டலார் - பகைவர். வண்டானத்தாரே - நாரையினங்களே. மிடைவார் - நெருங்குவார். வண்தானத்தார் - வளமுற்ற ஊரார். மாரன் சிலைப்பால் உளநாணே - மன்மதன் வில்லிற்பூட்டிய நாணாகிய வண்டே. மடவார் சிலைப்பால் - பேதைப்பெண்களின் பழிமொழியொலியால். உளம் நாணே மருவுற்றேன் - மனத்துவெட்கமே பொருந்தினேன். போது உற்பலமே - மலராகிய குவளையே. என் உடம்போ துற்பலமே - என் உடலோ பலவீனமே. மற்று, ஏ - அசைகள்.

12-வது செய்யுள்.

தேவியாற்றுக்கு:—*தானம் தழைத்து - நீராடுதல் தழைப்புற்று. அம்குசம் நிமிர்த்து - அழகிய தருப்பைப்புற்களை உயர்த்தி. தாங்கும் இரண்டு கோடுகொண்டு - (அத்தருப்பைகளைச்) சுமக்கும் இருகரைகளைப்பொருந்தி. சலத்தால் பாகை அடர்த்து - நீரின் சுவையால் தேம்பாகையும் வென்று. மைகண்டனையே மருவிபலன் அடைந்து - நீலகண்டனாகிய சிவபிரானையே விரும்பிப் பயனுற்று. வால் நந்தொடு துதிக்கை உற்று - வெள்ளிய சங்கொலியுடனே (நீராடுவார் செய்யும்) தோத்திரவொலியைப் பொருந்தி. வலையும் செவியும் உறநேர்ந்து - வள்ளைக் கொடியும் அழகும் பொருந்தப்பெற்று.*

யானைக்கு:—*தானம் தழைத்து - மதம்பெருக உற்று. அங்குசம் நிமிர்த்து - அங்குசத்தை உயர்த்தி. தாங்கும் இரண்டு கோடு கொண்டு - தாங்கிய இருதந்தங்களையுற்று. சலத்தால் பாகை அடர்த்து - கோபத்தால் பாகனைப்பொருது. மைகண்தனையே மருவி -*

கரியகண்ணைப்பொருந்தி. பலன் அடைந்து-வலிமையுற்று. வானம் தொடு துதிக்கை உற்று - தேவலோகத்தைத் தீண்டத்தக்க தும்பிக்கைபொருந்தி. வளையும் செவியும் முறம் நேர்ந்து - வளைவு பொருந்திய காதுகளும் முறம்போன்றனவாகி.

கின்னரம் - மிதுனப்புள், வீணைநாதம்.

13-வது செய்யுள்.

நாகமலைக்கு:—முருகே அமைய-முருகக்கடவுளே பொருந்த நாரதன் நான்முடித்தே சுற்றி போற்ற - நாரதமுனிவரும் நான்கு தலையையுடைய பிரமதேவனும் சூழ்ந்து வணங்க. விசைமுயல்கள் மருவ - வேகமாகச் செல்லும் முயலினங்கள் வசிக்க. மின் ஆர் அமுதப்பயோதரம் தழுவி - மின்னல் பொருந்திய நீரையுடைய மேகமண்டலத்தை அளாவி.

முல்லைமாலைக்கு:—முருகே அமைய - மணம்பொருந்த. நார் அதனல் முடித்தே சுற்றிப்போற்ற - நாரினால் தொடுத்துக் கட்டிப் புனைய. இசை முயல்கள் மருவ - (முயல் இசைகள் மருவ) (வண்டுகள்) பயில்கின்ற இராகங்களும் தேனும் பொருந்த. மின்னார் அமுதப்பயோதரம் தழுவி - பெண்களது பாலொழுகும்படியான தனங்களைத்தழுவுதலுற்று.

14-வது செய்யுள்.

கடலுக்கு:—ஆரவாரம் மிகப்பொருந்தி-பொருந்தும்படி கரைகளை மிகவும் கொண்டு. அணிந்த ஆரால் பந்தமுற்றும் - தாங்கிய ஆரால் மீன்களைக் கட்டுப்படுத்தியும். அமர் வேளாண்மை வரை

நிலைமையாகு - பொருந்திய வியவசாயத்தின் அளவிற்கேற்ப ஸ்திர மாகிய. இ கனம் கொண்டு - இந்த மேகத்தை (தன்பால் வரக்) கொண்டு.

மாதர்முலைக்கு:—ஆரஆரம் மிகப்பொருந்தி - முத்துமாலைகளை மிகவுங்கொண்டு. அணிந்தவாரால் பந்தமுற்றும்-தரித்த கச்சினால் கட்டப்பட்டும். அமர் வேள் ஆண்மை வரை நிலைமை ஆகி - பொருகின்ற மன்மதனது ஆண்டன்மையும், மலையின்தன்மையும் (உடைய) ஆகி. கனம்கொண்டு - பருமையுற்று.

முரசுக்கு:—ஆரவாரம் மிகப்பொருந்தி-முழக்கம் அதிகரிக்கப் பெற்று. அணிந்த வாரால் பந்தம் உற்றும் - தரித்த வார்களால் கட்டப்பட்டும். அமர்வேளாண்மை வரை நிலைமையாகி - படை கொடை விவாகம் என்ற மூன்று தன்மையவாகி. கனம் கொண்டு- உறுதியுடைமைபெற்று. நிலைமைஎன்றது மூன்றிடத்தும் கூட்டிக் கொள்க. அமர் என்பது படைமுரசையும், வேளாண்மை (உபகா ரம்) என்பது கொடை முரசையும். வரை (வரைதல்) என்பது விவாக முரசையும் குறிப்பன. வரைதல் - தல்விகுதி குன்றி வரை எனநின்றது.

பார்த்தன் - அர்ச்சுனன்.

15-வது செய்யுள்.

கருடவாகனத்துக்கு:—அரிமண்டலம் தொண்டிடப் பொர லால் - பாம்புகள் சுருளும்படி பொருதலால். ஆங்கு அ வினதை உதவுவதால் - அக்காலத்து அந்த வினதையென்பவள் பெறுதலா ல், அணி அம் பரத்தே எழுதலினால் - பொருந்தி அழகிய மேலுல

கத்துக்கு எழுந்துபோதலால். அரியது வசம் எனக்கொளலால் - விஷ்ணுவின் வசம் உடையதென (உலகத்தார்) கொள்ளுதலால்.

கருடகேதனத்துக்கு:—அரி மண்டலம் கொண்டிடப் பொரலால் - சூரியமண்டலத்தைச் சேரும்படி பொருந்துதலால். ஆம் கவின் அதை யுதவுதலால் - ஆகிய அழகானதைத் தருதலால்- அணி அம்பரத்தே எழுதலினால் - வரிசையாக துகிலில் எழுதுவதால். அரிய துவசம் எனக்கொளலால் - அருமையாகிய கொடி எனக்கொள்ளுதலால்.

தலைவன் கருணைக்குணத்திற்கு:—பிரியாது அகம் தண் அளி தாங்கி - பிரிதலின்றி மனத்துக்குளிர்ந்த அன்பைவாய்ந்து. பேணிச்சங்கந்தனைப் புரந்து - விரும்பி புலவர் கூட்டத்தைக் காத்து. பேதம் கலக்கம் அறத்தெளிந்து - மாறுபாடுங் கலங்குதலுமின்றித் தெளிவுற்று. புரியும் - உதவும். ஈகை இருகையினும் பொருந்தி - கொடையை இரண்டு கையிடத்தும் அடைந்து. அரசுக்கு இசைவாகி - ராஜரீகத்துக்கேற்றதாகி.

நகரைநதிக்கு:—பிரியாத கம் தண் அளிதாங்கி - பிரிவில்லாத நீரும் குளிர்ச்சியும் வண்டுகளும் பொருந்தி. பேண் இ சங்கம் தனைப்புரந்து - விரும்பத்தக்க இந்தச் சங்குகளை யாதரித்து. பேதம் கலக்கமறத் தெளிந்து - நுரையின் கலங்குதலின்றித் தெளிந்து. புரியும் ஈகை இருகையினும் பொருந்தி - விரும்புதற்குரிய பொன்னை இருபக்கமும் அடைந்து. அரசுக்கு இசைவாகி - அரச மரங்கட்கு நலந்தருவதாகி.

16-வது செய்யுள்.

சூரியனுக்கு:—மருவார் குமுததளம் பதைப்ப - மணமுள்ள ஆம்பல் மலரிதழ் வாட. வனவல்லியம் தாமரை நயப்ப - நீரினுள்

ள அகவிதழ் பொருந்திய தாமரைமலர்கள் விரும்ப. வயங்கூரொற்றைத் திகிரியினன் - மேருமலையை வலஞ்சுற்றுகின்ற ஒருசக்கரத்தால். வையத்தை நன்னெறி நடத்தி - இரதத்தை நல்லவழியிற் செலுத்தி.

பாட்டுடைத்தலைவனுக்கு:—மருவார் குமுததளம் பதைப்ப - பகைவரது பேரளவுற்ற சேனைகள் துடிக்க. வனவல்லியம் தாமரை நயப்ப - காட்டிலுள்ள புலிகளும் தாவித்திரியு மான்களும் நட்புக்கொள்ளவும். வயம்கூர் ஒற்றைத் திகிரியினன் - வெற்றிமிக்க ஏக சக்கரத்தால். வையத்தை நன்னெறிநடத்தி - உலகத்தை சன்மார்க்கத்தில் நடத்தியும்.

17-வது செய்யுள்.

பெரியகோயிலுக்கு:—சம்புவளர - சிவபிரான் வீற்றிருக்க. அருளுடையார் சார்பாய் - அருள்பெற்ற அடியார் சார்தலை யுற்று. அந்தத் திருமலையுந்தழுவ - அழகிய திருமலையென்னும் பெயருள்ள மலைக்கோயிலும் பொருந்த. சேரன் அம்பலம் மேற்றங்க - சேரன் அம்பலமென்னும் நடனசபை மேலாகப்பொருந்த. வெண்பூதங்காப்ப - வெள்ளைப் பூதத்தான் காவல்பொருந்த.

பிராவடியாற்றுக்கு:—சம்பு வளர - ஓர்வகைப் புற்கள் வளர்ச்சியுற. அருளுடையார் சார்பாய் - அருளுடையாரென்னும் சாத்தாகோயில் பக்கமாகி. அந்தத் திருமு அலையுந்தழுவ - அந்தமடங்கு தலையுடைய அலைகளும் பொருந்த. சேர் அனம் பல மேற்றங்க - பொருந்திய பல அன்னப்பறவைகள் மேல் வசிக்க. வெண் பூதம் காப்ப - வெள்ளிய சங்கினங்கள் அகலாதிருப்ப. (பூதம்-சங்கம்)

18-வது செய்யுள்.

மலையகக்காற்றுக்கு:—சாந்தம்இசைந்து அகில்அம்தோய்ந்து-சாந்தம் பொருந்தி அகில் விருக்ஷத்தின் அழகை மருவி. உதக்கு அதான நெறியடைந்து - வடக்கு முகமாகிய வழியை அடைந்து. சரமாம் பூவன்நேர் இவர - அம்பு ஆகிய மலர்களையுடைய மதன் நேரே.எறப்பெற்று. சார்ந்து மதனப்பயிர் வளர்த்து - காமப்பயிரை வளர்த்து.

மணமாக்கியாற்றுக்கு:—சாந்தம் இசைந்து அகிலம் தோய்ந்து-சந்தனமரங்களைப் பொருந்திப் பூமியிலேபட்டு. தக்கதான நெறியடைந்து - தகுதியுற்ற நீராடுந் துறைமார்க்கங்களை யிசைந்து. உசரமாம் - உயர்வாகிய. பூவனேரிவர - பூவனேரி யென்னும் குளத்தில் வர. சார்ந்து மதனப்பயிர் வளர்த்து - அங்கே தங்கி அழகிய பயிர்களை வளர்த்து.

19-வது செய்யுள்.

ஆதிசேடனுக்கு:—கனகம் குயின்ற படத்தாலும்-மிகுதியான தலைகளிற் பொருந்திய படங்களினாலும். கதித்த நீலத்து ஊணாலும் - விசைத்த காற்றாகிய உணவினாலும். கற்பநதனை மிஞ்சுதலாலும் - கற்பகாலங்களைக் கடந்து நிற்றலாலும். கட்டுப்படி மேற்கொளலாலும் - உறுதியாகிய பூமியைத் தாங்கலாலும். உனத - உயர்வாகிய. விண்டுவசத்தாலும் - திருமால் வசமுறலாலும். உடல் நெட்டுறு கோணத்தாலும் - உடல் நெடுமையும் மிக்க வளைவும் கொள்ளுதலாலும்.

அட்டகோணமாலுக்கு:—கனகம் குயின்ற படத்தாலும் - பொன்மயமான சித்திரப் படங்களினாலும். கதித்த - விளங்கிய.

நீலத்தூணலும் - நீல ரத்தினத் தம்பங்களாலும். கற்பந்தனை மிஞ்சுதலாலும் - கற்கட்டு மிகுதியாலும். கட்டுப்படி மேற்கொளலாலும் - கட்டிய படிகளைப் பொருந்தலாலும். உனத விண்துவசத்தாலும் - உயர்வாகிய ஆகாயமளாவிய கொடிகளாலும். உடன் - இவற்றுடன். எட்டுறு கோணத்தாலும் - அட்டகோணம்கொண்டிருத்தலாலும். அருவம் நகரானது இத்துறையே அடங்கா - அருவம் நீங்காத மன்மதனது இத்தன்மையானது அடங்காது.

20-வது செய்யுள்.

இந்திராணியரவிமனைக்கு:- திருவுலாவும் பலவணியும் - அழகிய பல ஆபரணங்களும். சிறந்த மணிமேகலையும் - சிறப்புற்ற மணிகளழுத்திய மேகலாபரணங்களும். உயர் சிந்தாமணியும் - உயர்வான சிந்தாமணியும். இருபொருளும் - சங்கநிதி பதுமநிதியும். தினமுந்து அமிழ்து உற்றிடு மியல்பும் - உண்ணுதற்கு முற்பட்ட அமிர்தம் பொருந்துந் தன்மையும். மருவும் - பொருந்தும்.

சரசுபதிமாலுக்கு:- திரு உலாவும் - சிறந்த உலாமடல்களும். பல அணியும் - பல அலங்கார நூல்களும். சிறந்தமணிமேகலையும்- உயர்வான மணிமேகலையும். உயர் - முதன்மைபெற்ற. சிந்தாமணியும் இருபொருளும் - சீவக சிந்தாமணியும் சிலேடைப்பொருள் நூல்களும். தினமும் தமிழ் ஊற்றிடு மியல்பும்-நாள்தோறும் தமிழ் நிறைகின்ற தன்மையும். மருவும் - பொருந்தும்.

தலைவனுக்கு:- முல்லைமாலை தருமாசலம் பால மன்மதனை யொத்தல்.

நகரை நதிக்கு:- முல்லை நிலத்தில் விருப்பம் கொண்டாய். புனலை கொடுக்கும் ஓசைக்கு ஆசைகொண்டாய். காலத்துக்கு ஏற்பவருவாய்.

21-வது செய்யுள்.

கருங்கடலுக்கு:- மாலுக்கு உகந்து அவிர் உப்பாலும் - விஷ்ணுவுக்கு விருப்பமுற்று விளங்கும் உப்பு என்ற பெயரையுடைமையாலும். மதிக்கப்பாலோங்குதலாலும் - மத்திக்கும்படி பால் பொங்குதலாலும். வணம் கார்பரவ வரலாலும் - அழகிய மேகமானது விசாலமாக வருதலாலும். வரமும் நிலைபெற்றிடலாலும் - வரமும் நிலைபேறுடைமையாலும். கோலப்பன்னீர் மணத்தாலும்-ஓடி வருகின்ற பல நீர்ப்பெருக்கைக் கலத்தலாலும். கூர்மம் கலம் கொண்டிடலாலும் - ஆமைகளையும் கப்பல்களையும் கொள்ளுதலாலும்.

கல்யாணமாலுக்கு:- மாலுக்கு உகந்த இருப்பாலும் - ஆசைக்கு இசைந்த இருக்கையாதலானும். மதிக்கு அப்பாலோங்குதலாலும் - சந்திரனுக்கு மேலுயர்ந்திருத்தலாலும். வணங்கார் பரவவரலாலும் - பகைவரும் வணங்க வருதலாலும். வரமு நிலைபெற்றிடலாலும் - யாவரும் வரும்படி மூன்று நிலை (வாசல்) களைக்கொண்டிருப்பதாலும். கோலப்பன்னீர் மணத்தாலும் - அழகிய பன்னீர் வாசனையாலும். கூர் மங்கலங்கொண்டிடலாலும் - மிகுந்த கல்யாணங்களைக் கொண்டிருத்தலாலும்.

22-வது செய்யுள்.

திருக்கணீசுரருக்கு:- பாகத்து அமலை கனிவிருந்து - பக்கத்தில் உமையினது அன்புபொருந்தி. படைத்துப் பசுப்பானேயமிட்டு - எல்லா வுயிர்களையும் படைத்து அவ்வுயிர்களிடத்துக்கருணை வைத்து. பாய சரச ஆரி உற - பரவிய அன்புள்ள ஆத்திமாலையணிந்த சோழனுற. பாங்காவிள் அக்கந் தருவதனுல் - நன்றாக விளங்குகின்ற கண் கொடுத்தலால்,

தருமசத்திரத்துக்கு:- பாகத்து அமலை கனி விருந்து படைத்து - பாகமாகிய அன்னமும் பழங்களும் புதுமையாகப் படைத்து. பசுப்பால் நேயம் இட்டு - பசுவின்பாலும் நெய்யும் விட்டு. பாயச ரசவாரி யுற-பாயசமாகிய இரச வெள்ளத்தை உட்கொள்ளும்படி. பாங்காய் விளக்கந் தருவதனல் - இனிமையாகவிளங்குதலுறலால்.

23-வது செய்யுள்.

குமரகோவிலுக்கு:- கந்தந்தருவள்ளிக் கொடியால் - மணமுற்ற வள்ளிநாயகியாலும். கவின்கூர் நாகவல்லியினல் - அழகுமிக்க தெய்வயானையாலும். கண்ணிவனைந்த முனிக்குலத்தால் - மலர் தொடுத்தணிகின்ற தவசிக் கூட்டங்களாலும். கனவேலியை மன்னுறுதலினல் - உயர்வாகிய வேலையுடைய முருகக்கடவுளைப்பொருந்துதலினலும்.

கோடிக்காலுக்கு:- கந்தம் தரு வள்ளிக்கொடியால் - கிழங்கு தருகின்ற வள்ளிக்கொடிகளாலும். கவின்கூர்நாகவல்லியினல்-அழகிய வெற்றிலைக் கொடிகளாலும். கண்ணிவனைந்த முனிக்குலத்தால் - கண்ணிகட்டிய அகத்திமரத்தொகுதியாலும். கனவேலியை மன்னுறுதலினல் - பெரிய வேலியைப்பொருந்தலாலும்.

24-வது செய்யுள்.

மூக்குணத்துக்கு:- செய்ய அயன் மால் சிவ வடிவாச் சேர - செம்மையான பிரமன் விஷ்ணு சிவன் வடிவமாகப்பொருந்தும்படி. அரு விமலை உதவ - அரிய அம்பிகை பெற. செழித்து - செழிப்புற்று. மேலோர் புதுக்கு உளத்து செய்கீர் முழுதும் தனதாக்கி - மேலோர்களின் பண்புபட்ட மனத்துள்ள செவ்விய தன்மைமுழுதும் தன்னுடையது ஆக்கி.

† எக்கணந்துச்சு:- செய்ய வயல் மால் சிவவடிவாச்சேர - சிறந்த வயல்கள் பெருமைபெற்ற மங்கலாகாரமாகப் பொருந்தும்படி. அருவி மலை உதவ - மலையானது அருவியைத் தர. செழித்து-அதனால் செழிப்படைந்து. மேலோர் புதுக் குளத்துச் செய்நீர்முழுதும் தனதாக்கி - மேல்புறத்துள்ள ஒரு புதிய குளத்தைச் சேர்ந்தவயல் நீர் முற்றும் தன்னுடையதாகச் செய்து.

† எக்கணமென்பது - ஒரு குளம்.

28-வது செய்யுள்.

கவிவாணருக்கு:— சீர் ஏய விரும்பு அடி மருவ - சீர் விளங்கும்படி விரும்பத்தக்க அடிகள் பொருந்த. சேர் முத்தகமும் குளகமும் பல் செய்யுள் விளை சொற்பெருக்கம் மிக்கு - அடுத்த முத்தகமும் குளகமும் ஆகிய பல செய்யுட்கள் பெருகத்தக்க சொற்பொலிவு மிகுத்து. திருமன்னவரை யுயர்வு ஆக்கி - சிறந்த அரசர்களை யுயர்த்தி. நேரே கவி நாணிலையமைக்கும் நீரால் - நேராகப் பாடல்களை ஆசு மதுரம் சித்திரம் வித்தாரமென்னும் நான்கு நிலையனவாகச்செய்யும் தன்மையால்.

களஞ்சியத்துக்கு:- சீரே அவிரும்படி மருவச்சேர் முத்தகமும் - சிறப்பு விளங்கும்படி யளவிடும்படி பொருந்திய முத்துக்களிடமும். குளகம்மும் - குளப்புனலும். பல்செய்யுள் விளைசொற்பெருக்கம் மிக்கு - பல வயல்களில் விளைகின்ற நெற்குவியல் மிகுத்து. திருமன்னவரை உயர்வாக்கி-அழகு பொருந்த மலையின் உயர்வாகச்செய்து. நேரே நவின் நாணிலையமைக்கும் நீரால் - நேர்மையாக அழகிய நான்கு நிலைகள் பொருந்திய தன்மையால்.